Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 119

National Tamil Daily தேசிய தினசரி

(10-6-65)

விசுவாவசு வைகாசி 28 பிறை 9 வியாழக்கிழமை

## சிங்களத் தகுதிப் பரீட்சையில் எல்லோரும் ஒரே மாதிரி விடை எழுதினர்

### இ: போ. சபையில் 15 பேர் தற்காலிக வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், வியா

தமிழ் அரசாங்க ஊழியர்களின் சிங்களமொழி தராதரத்தை அறிவதற்காக அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சிங்கள பரீட்சையில் 'காப்பி'யடித்ததாக இலங்கைப்போக்குவரத்துச்சபையைச் சேர்ந்த 15 ஊழியர்கள் உட்பட 40 பேர்களுக்குமேல் தற்காலிக வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளார்கள் என்று அறியப்படுகிறது.

இச்சிங்களத்தேர்ச்சிப்பரீட்சையில் பங்குபற்றிய அனைவரும் 'காப்பி'யடித்ததாகவும், இப்பரீட்சை ஒரு மண்டபத்தில் நடைபெற்றதால் 'காப்பி'டியக்க வசதியாக இருந்ததாகவும், செய்யப்பட்ட புகாரின் பேரிலேயே இவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதுபற்றித் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

பரீட்சார்த்திகள் எல்லோரும் ஒரேமாதிரியான விடை எழுதியிருப்பதாலேயே பரீட்சை அதிகாரிகள் இது பற்றி விசாரணை செய்துவருவதாகவும் தெரியவருகிறது.

# "ஒற்றுமையே எங்கள் நோக்கம்"

## யாழ்ப்பாணத்தில் மந்திரி சுகததாசா

யாழ்ப்பாணம், வியாழன்

"தேசியஅரசாங்கம் இன, மத பாகுபாடு எதுவுமின்றி சகல மக்களையும் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தும். தேசியஒற்றுமையை நிலைநாட்டி நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைப்பது ஒன்றே அரசாங்கத்தின் ஒரே கொள்கையும் நோக்கமுமாகும்" என்று தேசியசேவைகள், விளையாட்டுப்பகுதி மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் புதிய விளையாட்டுஅரங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ்பேசும் மக்களுக்கும் தமக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக்கூறிய திரு சுகததாசா தாம் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற சிலதினங்களுக்குள்ளாகவே மீண்டும் இங்கு வருவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்தார்.

விசேஷ விமானத்தில் நேற்றும் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த மந்திரி சுகததாசாவை யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கு அமைப்புச் சங்க உத்தியோகத்தர்களும் மற்றும் பலரும் வரவேற்றனர். முன்னாள் யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் மந்திரியை வரவேற்க விமானநிலையத்திற்கு வந்திருந்தார். மந்திரிக்கு மாலைசூட்டி வரவேற்றனர். யாழ்ப்பாணப் பகுதி எம் பி க்கள் எவரும் விமானநிலையத்தில் காணப்படவில்லை.

## வர்த்தகம் இலங்கையர் மயமாகும்

பம்பலப்பிட்டி, புதன்

வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்கும் திட்டத்தை அமுலாக்கும் வகையில் இலங்கை வர்த்தகர்களுக்கு சில சலுகைகளை அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கையர்கள் இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடுவதற்காக அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற முயற்சி மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்தவருடம் ஜனவரி முதல் திகதியிலிருந்து வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்கும் திட்டம் அமுல்நடத்தப்பட விருந்தது ஆனால் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின்படி முந்திய அரசாங்கத்தினால் இது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. தற்போதுள்ள அரசாங்கம் இத்திட்டத்தை அமுல்நடத்துமென்றும் இந்திய வர்த்தகர்கள் நிலை பற்றி பின்னர் தீர்மானிக்கப்படுமெனவும் அறியப்படுகிறது

## மகாராஷ்டிர அரசாங்கநடவடிக்கை

பம்பாய், ஜூன் 9

மகாரஷ்டிரத்தில் இன்றிரவு முதல் ரயில்வே ஊழியரும். போக்குவரத்துச்சேவை ஊழியரும் வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதாக அறிவித்திருந்தனர். வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதென்றும் ரயில் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் யாவும் அத்தியாவசிய சேவையென்றும் மகாராஷ்டிர அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

இன்றுகாலை 7 மணிக்குமேல் பொன்னாலை வரதராஜப்பெருமான் கோவிலில் அனுமார்கோவில் கும்பாபிஷேகம் அதி விமரிசையாக நடைபெறும்.

## திருமணத்துக்குச் சென்று திரும்பிய இளம் பெண்

### மோட்டார் வானுக்கும் மரத்துக்கும் இடையில் அகப்பட்டு மாண்டார்

யாழ்ப்பாணம், வியாழன்

திருமணவீட்டுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய ஒரு பெண் வழியில் ஒரு மரத்துக்கும் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வந்த ஒரு மோட்டார் வானுக்குமிடையில் அகப்பட்டு நெரிந்து மரணமான பரிதாப சம்பவம் சமீபத்தில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

வட்டக்கச்சிக குடியேற்றத்தில் வாழும் 35 வயதுடைய பாக்கியம் என்னும் பெண்ணின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற மரணவிசாரணையின்போது இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

காலஞ் சென்ற பாக்கியத்திற்கு இரு குழந்தைகள் உண்டு; வதிரியில் நடைபெற்ற ஒரு திருமணத்திற்குச் சென்றுவிட்டு திரும்பி வந்து கிளிநொச்சியில் இறங்கி வீட்டிற்குத் தேவையான சில்லறைச் சாமான்களை வங்கிக்கொண்டு வட்டக்கச்சிக்குப் போவதற்காக வீதிக்கு அருகே நின்றார். அப்பொழுது வட்டக்கச்சிக்குச் செல்லும் மோட்டார் வான் அவர் வழியால் வந்தபோது அதை நிறுத்த அவர் கையைக் காட்டினார். அந்த வான் நேரே அப்பெண்மீது மோதியபோது அப்பெண் மரத்திற்கும் வானுக்குமிடையில் அகப்பட்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமானார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற மரணவிசாரணையின்போது பிரேத பரிசோதனை செய்யும்படி மரணவிசாரணை அதிகாரி கட்டளையிட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வருந்துகிறோம்

6-5-65 'ஈழநாடு' பத்திரிகையில் "வயோதிபர் தற்கொலை" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் தனது மக்கள் தன்னைப் பராமரிக்காமல்விட்டதை யிட்டு மனம்வருந்திய வயோதிபர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகக் குறிப்பிட்டிருந்தது தவறாகும்.

இத்தவறான செய்தி வெளியானதற்காகவும் இதன் மூலம் அவரது புதல்வர்களான திரு. என். சோமசுந்தரம், திரு. என். நடராஜா ஆகியோர்களுக்கு மனவேதனை ஏற்பட்டிருப்பின் அதற்காகவும் வருந்துகின்றோம்.

'அரசியல்' ஆசிரியர்

## தற்காலிக பதவிநீக்கத்துக்கு தமிழ் ஆசிரியர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில அரசியலில்ஈடுபட்ட ஆசிரியர்களைத் தற்காலிகமாகப் பதவிநீக்கம்செய்ததை ஆட்சேபித்து இவ்விஷயத்தில் மேற்கொண்டு நடவடிக்கையைத் தவிர்த்துவிடுமாறு கோரி பின்வரும். தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

ஆசிரியர்கள் நீண்டகால அரசியலுரிமை அனுபவித்து வந்தவர்கள் இலங்கையிலுள்ள ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அரசியலுரிமைக்காக இடைவிடாது முயற்சி எடுத்துவந்தது.

சில அரசாங்க ஊழியர்களுக்கு அரசியலுரிமை கொடும்பது பற்றி யோசிக்கப்படும் என தேசிய அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கத்திலும் குறிப்பிடப்பட்டது. ஆசிரியர்கள் தமக்கும் அரசியல் உரிமைகள் வழங்கப்படுமென எதிர்பார்த்துள்ளனர். மற்றைய இலாகாக்களெதுவும் இவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை. இதுவிஷயத்தை மேலும் வளர்ப்பதானல் ஆசிரியர்களிடையே மேலும் மனத்தாங்கல்களை வளர்ப்பதாகவே முடியும்.

இத்தீர்மானங்கள் கல்வி மந்திரியின் கவனத்திற்காக அகில இலங்கைத்தமிழாசிரியர் சங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு முதலமைச்சருக்கு இ. தொ. கா. பிரதிநிதி புகார்

மன்னார், வியாழன்

"தலைமன்னார் தனுஷ்கோடி கப்பல்போக்குவரத்துச்சேவை சென்றவருடம் டிசம்பர் மாதம் 22-ந் திகதி விசியசூறவளிகாரணமாக மூற்றாக பாதிக்கப்பட்டதை தாங்கள் அறிவீர்கள். இச்சேவையை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு ஒருவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. புகைவண்டிமூலம் இந்தியாவிற்கு பிரயாணம் செய்யும் பெருந்தொகை மக்களை இக்குறைபாடு பெரிதும்பாதித்துள்ளது. அத்துடன் தபால்போக்குவரத்தும் தடைபட்டுள்ளது. இதனால் பரஸ்பர நல்லெண்ணமும் பாதிக்கப்பட்டுள்ளது. இக்காரணத்தினால் இரு அரசாங்கங்களுக்கும் பெரிதும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவற்றை கருத்தில்கொண்டு கப்பல் போக்குவரத்துச் சேவையை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மன்னார் மாவட்டக்கிளை பிரதிநிதி திரு. எஸ். வேலுசாமி ஒருதந்திச்செய்தியை தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்துக்கும் போக்குவரத்து மந்திரிக்கும் அனுப்பியுள்ளார்.

## இன்று

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி விநாயகராலயத்தில் மாலை 5 மணி முதல் ஸ்ரீ மணி பாகவதர் 'முருகனும் மூதாட்டியும்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.

●

இரவு 7-30 மணிமுதல் நெல்லியடி முருகமூர்த்தி கோவிலில் சம்பூரணராமாயண விரிவுரையில் 'மாயமான்' என்னும் பாகத்தைக் கீதாகாலக்ஷேபம் செய்வார்.

●

இரவு 10-30 மணி முதல் தாவடிப்பிள்ளையார் கோவில் உற்சவத்தில் 'தம்பியும் நம்பியும்' என்னும் சரிதையை கதாகாலக்ஷேபமாக நிகழ்த்துவார்.

## அரசாங்க உடமை

புதுடில்லி, ஜூன் 9

மத்திய பிரதேசத்தில்சாலைப் போக்குவரத்துச் சேவை அரசாங்க உடமையாக்கப்படவிருக்கின்றது. இதற்கு 13 கோடியே 45 லட்சம் ரூபால் செலவாகும். இத்திட்டம் மூன்று கட்டங்களில் அமுலாகும்.

## கதிர்காமமடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

கதிர்காம யாத்திரிகர் மடத் திறப்புவிழா 'வீரதமமந்திரி கௌரவ டட்லி சேனாநாயகாவினால் இம்மாதம் 11-ந் திகதி மாலை 4 மணிக்கு திறந்துவைக்கப்படும்.

## புதுமனைபுகுவிழா

நிகழும் விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் 28-ம் திகதி (10-6-65) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற புதுமனையில் பிரவேசம் செய்ய நிச்சயித்திருப்பதால், அத்தருணம் அன்பர்கள் உறவினர்கள் யாவரையும் சமூகங்கொடுக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்க இயலாததையிட்டு வருந்துகின்றோம்.

ச. சதானந்தன் (Bose) தம்பதிகள்.

221/3, கண்டிவீதி,
அரியாலை
யாழ்ப்பாணம்.

### மணிவாக்கு

விருப்பும் வெறுப்பும், இரு சக்திகள், இவையே உலகை நடத்துவன. விரும்பவேண்டியவற்றை விரும்பி, வெறுக்கவேண்டியவற்றை வெறுத்து எல்லோரையும் அணைத்து வாழ்க்கையை நடத்த வேண்டும்.

— கொழும்புத்துறை முனிவர்.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி ௴ 28 உ. (10-6-65)


### பசிக்கொடுமை

எட்டுப்பேர் கொண்ட குடும்பம் காப்படி அரிசிக் கஞ்சியில் வாழ்நாளை ஓட்டுகிறது, பசியென்று கேட்டழுதபிள்ளைகளுக்கு ஒருவேளை உணவு கொடுக்கமுடியாத தந்தை இனிப் பசியே வராத "மருந்தை" பிள்ளைகளுக்கும் கொடுத்து தானும் அருந்தி பசியில்லாத உலகுக்குப் போய்விட்டார். இப் பரிதாப சம்பவங்கள் நமது நாட்டில் தான் நிகழ்ந்துள்ளன.

வவுனியாவில் உள்ள ஒரு கிராமத்தில் எட்டுப் பேர் கொண்ட குடும்பம் கால் கொத்து அரிசியில் கஞ்சி காய்ச்சி காலங்கழிக்கிறது, இக் காட்சியைக் கண்ட சமூக சேவைப்பகுதி உதவி அதிபர் கண்ணீர்விட்டாராம். இப் பரிதாபக் காட்சியைக் காணும் எவருக்குத்தான் கண்ணீர் வராது! ஆனால் சமூகசேவை உதவி அதிபர் பார்த்தது இந்த ஒரு குடும்பத்தின் பரிதாபநிலையைத்தான். இப்படி இன்னும் எத்தனை குடும்பங்கள் இருக்கின்றனவோ! மானத்துடன் வாழ்ந்தவர்கள் பிச்சையெடுக்கவும் விரும்பாமல் ஒரு நேரக் கஞ்சிக்கே வழியில்லாமல் உயிரைவிடுகிறார்கள் என்பதற்கு அக்கரைப்பற்றில் சமீபத்தில் பசியென்று கேட்ட குழந்தைகளின் வாய்க்குள் நஞ்சை பருக்கிவிட்டு தானும் அதை அருந்தி உயிர்விட்ட தகப்பன் உதாரணம்.

நாம் என்னதான் ஜனநாயக சுதந்திரம் பற்றியும் அரசியல் சுதந்திரம் பற்றியும் பேசிக்கொண்டிருந்தாலும் பட்டினியிலிருந்து விடுதலைபெறவில்லை என்பதையும் வறுமையின் கோரத்தாண்டவம் நாளுக்குநாள் நாட்டில் அதிகரித்துவருகிறதென்பதையும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து பசியும், பட்டினியும், வறுமையும் தாண்டவமாடுகிறது. அரசாங்கம் திட்டங்கள் தீட்டிக்கொண்டிருப்பதென்னவோ உண்மைதான் இவை செயல்படும்வரை கொதிக்கும்வயிறு பொறுத்துக் கொண்டிருக்குமா? சமூகசேவை உதவி அதிபர் இந்த ஒருகுடும்பத்தைத்தான் பார்த்தார். அதனால் அக்குடும்பத்துக்கு ஏதோ சிறு உதவியாவது கிடைக்கக்கூடும். சமூகசேவைப் பகுதியினரும் இதர அரசியல் சமூகசேவை ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் நாட்டின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று பார்வையிடுவதுசிலருக்காவது நன்மை கிடைக்க வழிபிறக்கலாம். வரவேற்புகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும், விழாக்களுக்கும் ஆடம்பரத்துக்காக வீணாகச் செலவுசெய்பவர்கள் ஒருநேரக் கஞ்சிக்கே வழியின்றி அல்லல்படும் மக்களுக்குத் தாராளமாக உதவிசெய்யலாம். பஞ்சமும் பசியும் உலகில் ஏற்படுவது அதிசயமல்ல முன்னுளில் இப்படியான நிலை ஏற்பட்டபோது தமிழ்நாட்டில் உள்ள கோவில்களும் மற்றும் தர்மஸ்தாபனங்களும் அவ்வப் பகுதி மக்களுக்கு ஒருநேரக் கஞ்சியாவது வார்ப்பதற்கு கஞ்சித்தொட்டிகள்கட்டி கஞ்சி வார்த்துப் புண்ணியம் தேடின. இங்கு கஞ்சித்தொட்டிகள் கட்டாவிட்டாலும் அரசாங்கமும் வசதி படைத்தவர்களும் தர்மஸ்தாபனங்கள், சமூக சேவை ஸ்தாபனங்கள், ஆலயங்கள் மூலம் அல்லல்படும் மக்களுக்கு ஓரளவாவது உதவி செய்ய வேண்டும். இன்றேல் நாட்டில் புரட்சி ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

# இனஒற்றுமை வாதி சேர் வைத்திலிங்கம் துரைசாமி

— திரு. எஸ். சிவசுப்பிரமணியம் —

இலங்கையிலுள்ள பிரமுகர்களில் ஒருவரின் வாழ்க்கையில் செல்வாய்க்கிழமை மிகவும் முக்கியம் வாய்ந்த தினமாகும். 90 ஆண்டுகளுக்கு முன்னர் அந்தப் பெருமைவாய்ந்த தலைவர் பிறந்தார். பள்ளிக்காலந் தொட்டுக் கடந்த 90 ஆண்டுகளாக அவர் எங்கள் நாட்டின் நலனுக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் பெரிதும் உழைத்தார். அவர் ஒரு தமிழரும் இந்து மதத்தை சார்ந்தவருமாவார் இன்று அத்தலைவர் எங்கள் மத்தியில் சகல ஆற்றல்களுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இன ஒற்றுமைவாதியும், தேசியப்பற்றுக்கொண்டவரும், சைவசமயத்தில் ஆர்வம்மிக்கவருமான அப்பெரியார் தான் சேர் வைத்திலிங்கம் துரைசாமி.

யாழ்ப்பாணத்திலும், இந்தியாவிலும் கல்விபயின்ற பின்னர் இப்பெரியார் 2 பட்டதாரிப் பட்டங்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளியில் கல்வி பயிலும் பொழுது விளையாட்டுத்துறையில் மிகவும் ஆர்வம் காட்டிட பல வெற்றிச் சாதனைகளை நாட்டினரென்று இவரின் நண்பர்கள் அடிக்கடி கூறுவதுண்டு கல்வி பயிலும் காலத்தில் இவரின் தகப்பனார் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் விசேஷமாகக் கல்வி புகட்டுவதற்காக ஒரு ஆசிரியரை அமர்த்திக் கல்வி கற்பித்தாராம்.

சேர் வைத்திலிங்கம் துரைசாமி பட்டதாரியாகிய பின்னர் கொழும்பு சட்டக்கல்லூரியில் சேர்ந்து ஒரு வழக்கறிஞராகத் தகைமைபெற்றார். யாழ்ப்பாணத்திலேயே இவர் வழக்கறிஞராகப் பயிற்சிபெற ஆரம்பித்தார். பின்னர் அரசாங்கத்தினல் முடிக்குரிய வழக்கறிஞர் என்ற புதிய உத்தியோகத்தைப் பொறுப்பேற்றார், இப்பதவியைப் பொறுப்பேற்கும்படி அப்பொழுது அட்டோர்ணி ஜெனரலாக இருந்தவரும் பின்னர் நீதியரசராகவும் கடமையாற்றிய ஒருவர் சேர் வைத்திலிங்கம் துரைசாமியை பெரிதும் தூண்டவேண்டியிருந்தது என என்னிடம் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணத்திலுள்ள பல சங்கங்களுடன் சேர்ந்து தமிழரின் உயர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பெரிதும் உழைத்தார். யாழ்ப்பாணத்தில் நிலப்பரப்புச் சார்ந்தமுறையில் சட்டசபைக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்ட சமயம் சேர் வைத்திலிங்கம் துரைசாமி வடமாகாணத்திற்கு ஏகபிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டார். அவரின் சேவைகளிலிருந்து அவர் தமிழருக்கு மாத்திரம் தலைவர் என்று கருதப்படாது இலங்கையின் தலைவர்களுள் ஒருவராகவே விளங்கினர்.

1920ம் ஆண்டுக்குப் பின்னர் சேர் வைத்திலிங்கம் துரைசாமி சட்டசபையின் சபாநாயகராகவும் தெரிவுசெய்யப்பட்டார். இந்தப் பெரும் பொறுப்பை அவர் கௌரவத்துடனும் நேர்மையுடனும் தொடர்ந்து 9 ஆண்டுகள் செய்துவந்தார். இவரின் சேவைகளைப் பாராட்டுமுகமாக இவருக்குச் சேர் பட்டம் வழங்கப்பட்டது.

அரசியலில் பங்குகொண்டதைவிட சேர் வைத்திலிங்கம் துரைசாமி கல்வி கலாசாரம் சமயம் முதலிய துறைகளிலும் ஈடுபாடு காட்டினர். மேலும் யாழ்ப்பாணம் இந்து பரிபாலனசபையின் தலைவராகவும் சைவபரிபாலனசபையின் தலைவராகவும் இவர் கடமையாற்றினர். ஸ்ரீலஸ்ரீ யோகஸ்வாமிகளின் சீடராகவும் அவரின் சிறந்த பக்தராகவும் இவர் இருந்துவந்துள்ளார்.

சகல விஷயங்களிலுமிருந்து இளைப்பாறிய போதிலும் சேர் வைத்திலிங்கம் துரைசாமி தேசிய ஒற்றுமைக்காகப் பல தரப்பட்ட தலைவர்களுடன் தொடர்புகொண்டு இன ஒற்றுமையை உண்டாக்க முயற்சிசெய்தார். கடந்த வாரத்திலும் இவர் கொழும்பில பெருந்தலைவர்களைச் சந்தித்து சிங்கள-தமிழர் ஒற்றுமையை வற்புறுத்திக் கூறியுள்ளார்.

தற்பொழுது சேர் வைத்திலிங்கம் துரைசாமி திருக்குறள் வாசிப்பதிலும் மற்றும் மறுபிறப்பு, கர்மம், தியாகம் முதலிய விஷயங்கள் சம்பந்தப்பட்ட அறவு நூல்களை வாசிப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார். நாட்டில் இன்று சகல இனத்தவர்களுக்குமிடையில் நல்லெண்ணமும் சந்தோஷமும் நிலவுவதையொட்டியும் தனக்கு இறைவன் நல்வாழ்வைக் கொடுத்ததையொட்டியும் கதிர்காமக் கந்தனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அவர் அடுத்த வாரம் கதிர்காமம் செல்லவிருக்கிறார்.

மகாத்மா காந்தி, தான் 125 ஆண்டுகள் உயிர்வாழ்வாரென ஜோஸ்யம் கூறியது ஞாபகமிருக்கலாம். தினமும் 5 முறை கடவுளைத் தொழுத மாத்தறையிலுள்ள முஸ்லிம் பெண் அவரின் 128வது வயதில் மரணமானரென்பதைச் சில தினங்களுக்கு முன்னர் பத்திரிகையில் படித்தோம்;

சமூகத்துக்கும் மற்றும் எல்லோருக்கும் தொடர்ந்து சேவை செய்வதற்காக இறைவன் நீண்ட ஆயுளை சேர் வைத்திலிங்கம் துரைசாமிக்கு வழங்கி அவர் தனது 100வது ஆண்டுவிழாவைக் கொண்டாடவும் அருளபுரிவாளுக.

### மகாகணபதிப்பிள்ளையார் கோவில் ரதோற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன்

வேலணை மேற்கு மகாகணபதிப்பிள்ளையார் கோவில் இரத உற்சவம் இம்மாதம் 12-ந் திகதி நடைபெறும். தேர்த் திருவிழா வழமைபோல் காலை 11 மணிக்கு ஆரம்பமாகும். பிற்பகல் 2 மணியளவில் வசந்த மண்டப பூசை நடைபெறும். பிற்பகல் 8 மணியளவில் சுவாமி வீதிவலம் வருவார்.

### இலங்கை நிதிஉதவி கழகம்

பம்பலப்பிட்டி, புதன்

இலங்கைக்கு நிதி உதவும் வகையில் இலங்கை நிதி உதவிக் கழகம் ஒன்றை உருவாக்குவதற்கான பூர்வாங்க கூட்டம் அடுத்தமாத இறுதியில் நடைபெற இருக்கின்றது.

உலகவங்கி இக்கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் எனவும் வங்கியின் அங்கத்தவர்கள் இதில் கலந்துகொள்வார்களெனவும் அறியப்படுகிறது.

இக்கூட்டம் லண்டனில்நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டத்தில் இலங்கையிலுள்ள உயர் அதிகாரிகளைக்கொண்ட குழுஒன்று கலந்துகொள்ளவிருக்கின்றது.

### பிரிட்டன் செல்ல இலங்கையர் ஆவல்

பம்பலப்பிட்டி, புதன்

பிரிட்டனில் உத்தியோகங்கள் பெறுவதற்காக 8200 இலங்கையர்கள் இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைமிஷனில் தமது பெயர்களைப் பதிவுசெய்துள்ளார்கள்,

காமன்வெல்த் நாடுகளிலிருந்து பிரிட்டனில் குடியேற விரும்புபவர்கள் குறித்து பிரிட்டன் புதிதாக முடிவுசெய்யும் வரை இவர்கள் காத்திருக்கவேண்டுமென அறியப்படுகிறது,

### வற்றாப்பளை கண்ணகி தீர்த்தம்

குமுழமுனை, புதன்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் தீர்த்தம் முல்லைத்தீவு கடலில் எடுக்கப்பட்டது. கண்ணகி அம்மன் பொங்கல் 14-ந் திகதி நடைபெறும்.

# ஐயாறன் எழுதுவது

மூன்று மாதங்களுக்கு முன் நான் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தேன். நகருக்கு சமார் பத்து மைல் தூரத்திலுள்ள செங்கலடியிலே அப்போது சிவதொண்டன் நிலைய ஆரம்ப விழா நடந்தது.

அங்கு ஸ்ரீ சந்தசாமியை (ராமலை பாதம்) தரிசிக்கச்சென்றேன், நான்குமுழ நதர்வேட்டியைக்கட்டிக்கொண்டு தாழ்வாரத்திலே ஒரு தடுக்கில் உட்கார்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தார் அவர் பக்கத்தில் ஒரு பழைய தோல் பை, அதில் என்ன இருந்தது தெரியுமா? ஸ்ரீயோகசுவாமிகள் தமிழில் எழுதிய நற்சிந்தனைப் பாடல்களை ஆங்கிலத்தில்அவர் மொழிபெயர்த்து "சிவதொண்டன்" இதழ்களில் வெளியான பகுதிகளை அப்பையில்சேர்த்து வைத்திருந்தார்,

இத்தமிழ்ப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க அவர் எவ்வளவு சிரமமெடுக்கிறார் தெரியுமா? இருமொழிகளும் தெரிந்த அன்பர்கள் வரும்போது தமது சந்தேகங்களைக் கேட்டுத்தெளிவுபடுத்திக் கொள்ளுகின்றார். தமிழ் ஆங்கில அகராதிகூட இல்லை, செல்வச் சீமானான ஓர் ஆங்கிலேய பிரபு தமிழ்ப்பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட முற்படுவது மிகவும் அரிதல்லவா? தான் பெற்ற இன்பத்தை உலக மக்களும் பெறவேண்டுமென்ற மேலான நோக்கத்துடனேயே அவர் இக்கைங்கரியம் செய்கின்றார்.

* * *

அந்த ஆசிரமத்தில் என்ன சேவை நடக்கிறதென்று விசாரித்தேன். சுமார் 45 ஏக்கர் காணியில் நெல் உற்பத்தி நடக்கிறதாம், அன்னதானத்துக்காக உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்பது கொழும்புத்துறை முனிவரின் விருப்பம், அப்பகுதியில் ஏராளமான நெல் விளைவதால் அங்கு பசிபட்டினி கிடையாதென்றும் அன்னதானத்துக்கு அவ்வளவு அவசியமில்லை என்றும் ஓர் அன்பர் கூறி; விளையும் நெல்லை விற்பனை செய்து ஆசிரமத்தின் மற்றச் செலவுகளுக்கு அதைப் பயன்படுத்துவதாகத் தெரிவித்தார்.

* * *

கிழக்கு மாகாணத்தில் பசிபட்டினி கிடையாதா? மறுநாள் பத்திரிகையில் திடுக்கிடும் செய்தியொன்று வெளியாயிற்று, அக்கரைப்பற்றில் ஒரு ஏழைத் தந்தை இரவிலே தன் இரு குழந்தைகளும் பசி என்று உணவு கேட்க உணவில்லாததால் விஷம்கொடுத்து அவ்விரு குழந்தைகளையும் கொன்று தானும் விஷமுண்டு இறந்ததாக ஒரு செய்தியைப் பார்த்தேன். இந்த மாதிரி எவ்வளவு ஏழைக்குடும்பங்கள் பட்டினியால் வெளியில் சொல்லாமல் அவதிப்படுகின்றனவோ!

* * *

சிவதொண்டன் நிலையத்திலே சாதி, சமய வேறுபாடுகள் காட்டாமல் அன்னதானம் செய்வதால், பசிக்குக் கஞ்சியாவது காய்ச்சி வார்த்தால் பல உயிர்கள் பட்டினியால் சாகாமல் காப்பாற்றப்படலாம், தனியார் வீடுகளில் இவ்விதம் செய்வதாயின் அது பிச்சையிடுவதாகும். பிச்சை வாங்கவோ, தர்மம் வாங்கவோ பலரும் தயங்கலாம். ஆனால் கோவில்களிலும் ஆசிரமங்களிலும் செய்யும் அன்னதானம் தெய்வ பிரசாதமாக் மதித்து எவரும் ஏற்க தயக்கமின்றி முன்வருவர், ஆகவே பெரியவரின் கருத்துப்படி அன்னதானம் நடக்க ஒழுங்கு செய்தால் நல்லதென்றும் விளையும் நெல்லை அதற்கே பயன்படுத்த வேண்டுமென்றும் கூறியதை ஸ்ரீ சந்தசாமி ஒப்புக்கொண்டார். தர்மங்கள் நடந்தால், வேறு செலவு

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

களுக்கும் தேவையான பணம் குவியும் கதிர்காமத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார் செய்யும் அன்னதான கைங்கரியத்துக்கு முட்டில்லாமல் ஏராளமான பணம் குவிந்து வருவதே இதற்குநல்ல அத்தாட்சி,

* * *

"கலைவெட்டாமலே, ஜலம் விடாமலே கதிர் ஒரு முழம் காணுமாம், கவிக்குது பயிர் இருக்குது அதைக் கட்டுக் கட்டவே தோணுமாம், மட்டில்லாது ஏரி குளங்கள் பள்ள மேடுகள் தண்ணியாம், பரம சிவனைப் பணியும் நந்தனுர் பயிரிடும் திருப்பண்ணையாம்" என்ற நந்தனுர் பாடல் தான் அங்கு வயல்களையும் தோப்புகளையும் காணும்போது எனக்கு நினைவுவந்தது. எங்கும் விளைச்சல் குறைந்தாலும் தொண்டர் சந்தசாமி பயிரிடும் திருப்பண்ணையில் நல்ல விளைச்சலாம்!

* * *

அரசியலில் அடிமைப்பட்டிருந்த காலத்திலே நமது தர்மங்களையும் பண்பாட்டையும் நாம் பெரிதும் மறந்துவிட்டோம். சுதந்திரம் பெற்றபின் மீண்டும் சைவம் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. மூன்றுமாதங்களுக்கு முன்தான் கிழக்கே அந்த 'சிவதொண்டன்' நிலையம் ஆரம்பமாயிற்று. அங்கு சந்தசாமியார் செய்யும் திருத்தொண்டினைக் கண்டு, பலரது தப்பெண்ணங்களும் நீங்கி, ஆதரவு அதிகரித்து வருவதாகவும் அறிந்தேன். தர்மங்கள் பெருகப்பெருக அங்கு பொதுமக்களின் ஆதரவும் அமோகமாக அதிகரித்து, அந்த ஆசிரமமும் சைவமும் தழைத்தோங்குமென்பதில் ஐயமில்லை.

* * *

தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள், வாயினும் மனத்தும் மருவிநின்றகலா மாண்பினர் காண்பல வேடர், நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி நுழைதரு நூலினர் ஞானம், கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரே.

—திருஞானசம்பந்தசுவாமிகள்

வியட்நாமில்

# அமெரிக்கத் துருப்புக்கள் நேரடிச்சண்டையில் ஈடுபடும்

வாஷிங்டன், ஜூன் 9

வியட்நாமில் இனி அமெரிக்கத் துருப்புக்கள் நேரடியாகவே சண்டையில் ஈடுபடும்.

இதுவரை தென்வியட்நாமில் உள்ள அமெரிக்க நிலைகளையும் அமெரிக்கப் பிரஜைகளையும் பாதுகாப்பதற்கே அமெரிக்கத் துருப்புக்கள் பொறுப்பாக இருந்தன. ஆனால் அமெரிக்க நிலைகள் தாக்கப்பட்டால் திருப்பித் தாக்குவதற்கும் தென்வியட்நாம் விமானப்படையினருக்கு உதவியளிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இப்பொழுது அமெரிக்க அதிபர் திரு லிண்டன் ஜோன்சன் பிறப்பித்துள்ள உத்தரவின்படி வியட்நாமில் தென்வியட்நாம் அரசாங்கம் கேட்டுக்கொண்டால் தென்வியட்நாம் படைகளுக்கு உதவியாக நேரடியாக தரைச்சண்டையில் அமெரிக்கத் துருப்புக்கள் ஈடுபட முடியும்.

தென்மேற்குப் பருவம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து வியட்காங் கம்யூனிஸ்டுகளின் தாக்குதல்கள் அதிகரிக்கக்கூடுமென எதிர்பார்த்தே அமெரிக்க ஜனாதிபதி இப்புதிய உத்தரவை விடுத்திருப்பதாக கருதப்படுகிறது.

# வியட்நாமில் அமைதியேற்பட வழிபிறக்கலாம்

## கனடா செல்லும் சாஸ்திரி நம்பிக்கை

புதுடில்லி, ஜூன் 9

இந்தியப் பிரதமர் திரு லாலபகதூர் சாஸ்திரி கனடாவுக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்யும் பொருட்டு இன்று காலை ஒட்டாவாவுக்குப் பிரயாணமானார்.

கனடாவிலிருந்து லண்டன் சென்று அங்கு காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்வார். அதன்பின் லண்டனிலிருந்து புறப்பட்டு இம்மாத இறுதியில் அல்ஜியர்ஸில் நடைபெறும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அல்ஜியர்ஸ் செல்வார்.

ஒட்டாவா செல்லும் வழியில் கெய்ரோவில் திரு சாஸ்திரி சில மணிநேரம் தங்குவார். அச்சமயம் ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸருடன் ஆலோசனை செய்வார். ஆசிய ஆபிரிக்க - மகாநாடு சம்பந்தமாகவும் சர்வதேச நிலைமை பற்றியும் நாஸருடன் பயனுள்ள ஆலோசனை செய்யவிருப்பதாக திரு. சாஸ்திரி டில்லி விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறினார். நாஸரைச் சந்திப்பதற்கு வெகு மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக இந்தியப் பிரதமர் சொன்னார்.

கனடா விஜயத்தைப் பற்றி திரு. சாஸ்திரி குறிப்பிடுகையில் இது ஒரு நல்லெண்ண விஜயம் என்றார்.

கனடியத் தலைவர்களுடன் தாம் நடத்தும் ஆலோசனைகள் வியட்நாமில் அமைதியை ஏற்படுத்த வழிவகுக்கக் கூடுமென தாம் நம்புவதாகவும் திரு. சாஸ்திரி கூறினார். இந்தோசீனாவுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனில் இந்தியாவும் கனடாவும் அங்கம் வகிக்கின்றன. இந்தியாவுக்கும் கனடாவுக்குமிடையில் பிரச்னை எதுவுமில்லை என்றும் பொதுவான கொள்கைகள் பல இருக்கின்றனவென்றும் கூறிய திரு. சாஸ்திரி சமாதானமும் ஜனநாயகமும் இவ்விரு நாடுகளின் முக்கிய கொள்கையென்றார். இம்மாதம் 14-ந் திகதி வரை இந்தியப் பிரதமர் கனடாவில் இருப்பார்.

இந்தியப் பிரதமரின் வருகையைத் தாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக கனடா வெளிவிவகார மந்திரி நேற்றுத் தெரிவித்தார். வியட்நாமில் சண்டையை நிறுத்தவும் அது சம்பந்தமான உடன்பாட்டை அமுல் நடத்தவும் அமைதிப் படையொன்றை அங்கு நிறுவவேண்டுமென்ற இந்தியாவின் யோசனை நம்பிக்கையுடன் பரிசீலனை செய்யப்படக் கூடியது என்று அவர் கூறினார்.

## விண்வெளியில் எடுக்கப்பட்ட திரைப்படம்

புளோரிடா, ஜூன் 9

விண்வெளியில் பிரயாணம் செய்கையில் விண்வெளியில் இருபது நிமிஷ நேரம் அமெரிக்க விண்வெளிவீரர் மேஜர்வைட் நடந்து சென்றதல்லவா? அவர் விண்வெளிக் கப்பலிலிருந்து வெளியே புறப்பட்டதையும் நடந்து சென்றதையும் பின்னர்பேழைக்குள் திரும்பிப் புகுந்ததையும் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. விண்வெளிக் கப்பலில் பொருத்தப்பட்டிருந்த தானாக இயங்கும் திரைப்படக் கமரா மூலம் படம் பிடிக்கப்பட்டது. விண்வெளி வீரர்கள் நாளை புளோரிடாவுக்கு வருகின்றனர்.

# பாகிஸ்தான் ஆட்சேபத்தை இந்தியா நிராகரித்தது

புதுடில்லி, ஜூன் 9

அஸ்ஸாம் ராஜ்யத்திலுள்ள ஷில்லாங்கிலிருந்த பாகிஸ்தான் உதவி ஹைகமிஷனர் காரியாலயத்தை மூடும்படி இந்திய அரசாங்கம் பிறப்பித்த உத்தரவுக்கு பாகிஸ்தான் தெரிவித்திருந்த ஆட்சேபத்தை இந்தியா நிராகரித்து விட்டது.

பரஸ்பர அடிப்படையில்தான் தூதர் காரியாலயங்கள் நிறுவப்படுவதென்பதையும் இந்திய அரசாங்கம் பாகிஸ்தானுக்குச் சுட்டிக்காட்டியுள்ளது. ஷில்லாங்கிலிருந்த பாகிஸ்தான் உதவி ஹைகமிஷனர் காரியாலயம் இந்தியாவுக்கெதிரான நாசவேலைகளில் ஈடுபட்டதை அடிக்கடி பாகிஸ்தான் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதென்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

ராஜ்ஷாகியிலிருந்த இந்திய உதவி ஹைகமிஷன் காரியாலயத்தின் மீது முற்றிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை பாகிஸ்தான் சுமத்தியிருந்ததென்றும் இந்தியா குறிப்பிட்டுள்ளது.

## அப்துல்லா விசாரணைக்காக கொண்டுவரப்படுவார்

ஸ்ரீநகர் ஜூன் 9

முன்னாள் காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா மீண்டும் விசாரணைக்காக இங்கே கொண்டுவரப்படுவார் என்று இந்தியாவின் கல்வி மந்திரி குறிப்பிட்டார். சென்ற மாதம் 8-ந் திகதி அப்துல்லா உள்நாட்டு வெளிநாட்டு பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டார். இன்றுவரை அவருக்கெதிராக ஒரு குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை. வெளிநாட்டுப்பிரயாணத்தின்போது அப்துல்லா இந்தியாவின் நல்லெண்ணத்தை பாதிக்கும் அளவிற்கு நடந்துகொண்டார் என்று கல்விமந்திரி மேலும் கருத்து தெரிவித்தார்.

## விமானம் வீழ்த்தப்பட்டது

சைகோன், ஜூன் 9

தென்வியட்நாம் எல்லைக்கு வடக்கே 40 மைல் தூரத்தில் அமெரிக்க ஜெட் போர்விமானமொன்றை வியட்காங் கம்யூனிஸ்டுகள் நேற்று சுட்டுவீழ்த்தினர்.

## துப்பாக்கிப்பிரயோகம்

புதுடில்லி, ஜூன் 9

கிழக்குப் பாகிஸ்தான்-அஸ்ஸாம் எல்லையில் லத்தித்தில் பாதும்மா பாசிம் பகுதியில் கிழக்குப் பாகிஸ்தான் துருப்புக்கள் நேற்றுத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அறிவிக்கப்படுகிறது

## மன்னரே பிரதம மந்திரி மொரோக்கோவில் புதிய மந்திரிசபை

ரபாத் ஜூன் 9

மொரோக்கோவில் அவசரகாலநிலைமையைப் பிரகடனஞ் செய்து பார்லிமெண்டைக் கலைத்து ஆட்சி நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மன்னர் ஹாசன் பிரதம மந்திரியாகவும் பதவியேற்றுக்கொண்டுள்ளார். இருபதுபேரைக்கொண்டபுதிய மந்திரிசபையொன்றையும் அவர் நியமித்துள்ளார். பழைய மந்திரிசபையில் அங்கம்வகித்த பலரும் புதிய மந்திரி சபையிலும் இடம்பெற்றுள்ளனர் பல்வேறு கட்சியினரும் சுயேச்சையினரும் இப்புதிய மந்திரி சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

மொரோக்கோவுக்கு விஜயம் செய்யவிருந்த டுனீஷிய அதிபர் ஹபீப் போர்கிபா, மன்னர் ஹாசனின் வேண்டுகோளின் மீது தமது விஜயத்தை ஒத்தி வைத்துள்ளார்.

## 'அமெரிக்கா புரிந்துகொள்ளவில்லை'

டோக்கியோ, ஜூன் 9

ஆசியா பற்றி அமெரிக்கா சரியாக புரிந்துகொள்ளவில்லை இதனால் தான் வியட்நாம் பிரச்னை நீடித்துக்கொண்டிருப்பதாக ஜப்பானியமுன்னாள் பிரதமர் திரு. ஷிகேரு யோஷிடா குறிப்பிட்டுள்ளார்.

உலகத்துக்கு தலைமைதாங்க அமெரிக்கா விரும்புகிறது ஆனால் அசல் அமெரிக்க வழியைக் கைக்கொண்டு இதனைச் சாதித்துவிடமுடியாது.

## வலியினால் மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வல்லிபுரம் மகள் உதயராணி வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானார்:

மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையின்போது சாட்சியமளித்த டாக்டர் விக்னராசா நியோமியாவினால் வலிபேற்பட்டு மரணமானார் என்று தெரிவித்தார்.

காலஞ்சென்றவரின் தகப்பனார் வல்லிபுரம் சாட்சியமளிக்கையில், தம்மகளுக்கு முன்பும் வலிவருவது வழக்கமென்றும் கடைசியாக வலி வந்தபோது அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் அங்கு அவர் மரணமானார் என்றும் கூறினார். இயற்கை மரணம் என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## தமிழ்காங்கிரஸ் புதிய கிளை

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 5-ம் வட்டாரக் கிளை ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்புத்துறையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. கூட்டத்திற்குத் திரு. இ. சோமசுந்தரம் தலைமைவகித்தார்.

தலைவர் பேசுகையில், பொருளாதாரத்துறையில் விருத்தியடையாத வடகீழ்மாகாணங்கள் தனித்தியங்கமுடியாதென்றும், ஒற்றையாட்சிமுறையின் கீழ் எமது உரிமைகளை சர்வ கட்சிகளையும் கொண்ட வட்டமேசை மகாநாட்டின் மூலமே சுருக்கமாகத் தீர்க்கமுடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

திரு. க. ஸ்ரீபாஸ்கரன் குத்துவிளக்கேற்றி கிளையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

வட்டாரங்கள் தோறும் கிராமங்கள்தோறும் இப்படியான காங்கிரஸ் கிளைகள் ஸ்தாபிப்பது வரவேற்கத்தக்கது, தமிழரசுக்கட்சி தனது ஒப்பந்தங்களைப்பற்றி பலவாறாகத் திரித்துக் கூறிவருவதை நாம் தினமும் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்னைகளைப் பொறுத்தவரையில் நாம் சர்வ கட்சிகளையும்கொண்ட வட்டமேசை மகாநாடுமூலம்தான் தீர்க்க முடியும். ஏனெனில் எல்லாக் கட்சிகளுடனும் சேர்ந்து செய்யும் எந்த உடன்பாடும், தீர்மானமும் நிரந்தரமானதொன்றாக இருக்கும். நான் கொழும்பிலே பல எதிர்க்கட்சி அங்கத்தவர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிய சந்தர்ப்பத்தில் அவர்கள் எமது வட்டமேசை கொள்கையை ஆதரித்து வரவேற்பதைக் கண்டேன்.

அடுத்ததாக நியாயதுரந்திரர் எஸ். செல்வராசா, திரு. பொ. நடராசா ஆகியோரும் பேசினார்கள்.

பின்னர் இவ்வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. இ. சோமசுந்தரம், உபதலைவர்கள்- திருவாளர்கள் மு. செல்லையா, எஸ். குமாரசாமி, ஏப். பத்திக், காரியதரிசி- திரு சி. முத்துக்குமாரசாமி, உபகாரியதரிசி- திருவாளர்கள் என். சுவாமிநாதன், க. ச. பாலசிங்கம், தனாதிகாரி- திரு. பொ. நடராசா, நிர்வாகசபை- திருவாளர்கள வி. சின்னையா, துரை கார்த்திகேசு, கா. செல்லையா, பொ. நடராசா, ச. ஆறுமுகம், சி. பாக்கியநாதேன்.

# "சுடலைமடத்தடியில் முதல் எதிரி என்னைக் குத்தினர்"

## மந்துவில் இரட்டைக் கொலை வழக்கில் காயமடைந்தவர் சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

மந்துவில் இரட்டைக்கொலை வழக்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. பி. ஜெரூபேர்ட் சில்வா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது காயமடைந்தவரும் இதுவரைகாலமும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவருமான கந்தன் கிட்டினன் (20 வயது) சாட்சியமளித்தார். அவர் சாட்சிக் கூண்டினுள் கதிரையில் இருந்தபடியே சாட்சியமளித்தார்.

அவர் கூறியதாவது:

"சம்பவம் நடந்த 19-4-65 அன்று இளுவான் மயானத்தில் சின்னம்மாவின் பிரேதத்தைத் தகனம் செய்வதற்காக நான் விறகுகளை அடுக்கிக்கொண்டிருந்தேன். என்னோடு இரண்டு எதிரிகளும் செல்லப்பாவும் உட்பட வேறு சிலரும் விறகு அடுக்கிக்கொண்டிருந்தனர். அப்பொழுது முதலாம் எதிரி என்னிடம் "பெண்கள் சண்டையிட்டால் நீயேன் பொலிஸில் முறையிடுவான்" என்று கேட்டுக்கொண்டு என்னை நெருங்கி வந்தார். நான் பின்னுக்குச் சென்றேன். சுடலையில் இருந்த மடத்தடிக்கு அருகில் நான் சென்றதும் அவர் தனது மடியில் இருந்த ஒரு "கிறிஸ்" கத்தியை எடுத்து எனது வலது பக்க தோள் மூட்டில் குத்தினர். உடனே நான் மடத்தின் உள்ளே நுழைந்தேன். 1-ம் எதிரியும் பின்தொடர்ந்தார். உடனே கிட்டினன் என்ற வேறு ஒருவரும் எனக்குக் கத்தியால் குத்தினர். 1-ம் எதிரி மீண்டும் கத்தியால் குத்தினர் நிலத்தில் விழுந்த நான் எழும்புகையில் இரண்டாம் எதிரி எனது இடதுபக்க மார்பில் ஒரு கோடரியால் அடித்தார் நான் உடனே நிலத்தில் விழுந்தேன். மூன்றாவது நாள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் எனக்கு நினைவு வந்தது.

சாட்சியை எதிரிகளின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தார்.

வழ: "பெண்கள் சண்டையிட்டால் நீ ஏன் பொலிஸில் முறையிடுவான்" என்று 1-ம் எதிரி உம்மைக் கேட்டபொழுது நீர் என்ன கூறினீர்?- நான் புதுவீட்டிற்குப் போனபொழுது அவர் வழியில் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியமையினாலேயே பொலிஸில் முறையிட்டேன் என்று கூறினேன்.

வழ: உண்மையாக அப்படி பொலிஸில் புகார் செய்தீரா?- ஆம்.

வழ. மடத்தினுள் உம்மைக் குத்திய கிட்டினன் என்பவர் யார்?- கல்வயலைச் சேர்ந்தவர்.

வழ: கலகம் எபொழுது ஆரம்பமானது?- பிரேதம் கொள்ளி வைப்பதற்குமுன்.

வழ: சுடலையில் நீர் கொடுவாளை வைத்திருந்தீரா?- இல்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

## உப ஜனாதிபதிக்கு மன்னர் விருந்து

ஏதென்ஸ், ஜூன் 9

இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசேன் நேற்று கிரேக்க மன்னர் கொன்ஸடன்டைனை அவரது கோடைகால வாசஸ்தலத்தில் சந்தித்தார். இந்திய உப ஜனாதிபதிக்கு மன்னர் நண்பகல் விருந்தளித்தார். நேற்றிரவு கிரேக்க பிரதம மந்திரி, டாக்டர் ஹுசேனுக்கு இராப்போசன விருந்தளித்தார். இன்று எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையையும், கப்பல் கட்டும் இடங்களையும் பார்வையிடுவார்.

# கலைப்பட்டதாரிகளுக்கு விரைவில் வேலைகிடைக்கும்

## தூதுகோஷ்டியிடம் மந்திரி வாக்குறுதி

வெள்ளவத்தை, புதன்

வேலையற்றிருக்கும் தமிழ்ப்பட்டதாரிகளுக்கு விரைவில் இடம் கிடைக்க தான் நடவடிக்கை எடுப்பதாக கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை வேலையற்றிருக்கும் தமிழ் பட்டதாரிகள் சார்பில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் கல்விமந்திரியை பேட்டி கண்டபோது தெரிவித்தார்.

தமிழ்ப்பட்டதாரிகள் வருடக் கணக்கில் வேலையற்றிருப்பதாகவும், அதிகபணத்தை தங்கள் படிப்பிற்காகச் செலவழித்துவிட்டு, பெற்றோருக்குப் பாரமாக இருப்பதாகவும், அவர்களுக்கு விரைவில் வேலை தேடிக் கொடுக்கும்படியும், கல்விமந்திரியிடம் தெரிவிக்கப்பட்டது.

கலைப் பட்டதாரிகளுக்கு விரைவில் பாடசாலைகளில், வேலைகொடுப்பதாக கல்வி மந்திரி உறுதியளித்தார்.

இந்தியாவில் கல்வி படின்ற 400 தமிழ் பட்டதாரிகளும், இலங்கையிலே கல்வி பயின்ற 800 தமிழ் பட்டதாரிகளும் கடந்த பல வருடங்களாக வேலையற்றிருக்கிறார்கள். பலதடவை இவர்கள் எம். பி க்கள் மூலமாகவும், தூதுக்கோஷ்டி மூலமாகவும், கல்வி மந்திரியைப் பேட்டிகண்டும், இதுவரை இவர்களுக்கு விமோசனம் கிடைக்கவில்லை.

விஞ்ஞானப் பட்டதாரிகள் பலரும் வேலையற்றிருப்பதை சுட்டிக்காட்டி நமது நிருபர் உடுப்பிட்டி எம். பி. யிடம் கேட்டபோது தொழில்நுட்பக கல்லூரிக்குப் பொறுப்பானரான திரு. அலெக்ஸ் நாடுதிரும்பியதும் விஞ்ஞானப் பட்டதாரிகளின் நிலை குறித்து புதிய திட்டமொன்று வகுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## கடல் அரிப்பை தடுக்க ...

குரும்பசிட்டி, புதன்

இளவாலையைச்சேர்ந்தவளித்தூண்டல் கிராமத்தில் சென். அந்தனிஸ் தேவாலயத்திற்கு அருகில் ஏற்பட்டுவரும் கடல் அரிப்பை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உள்நாட்டு மந்திரியைக் கேட்டுக்கொண்டுள்ளார். தற்போது காற்று பலத்து வீசுவதால் முன்னரிலும் பார்க்க கடல் அரிப்பு கூடுதலாக ஏற்பட்டு தென்னைமரங்கள், மீனவர்களின் குடிசைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

## கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

கொஸ்வத்தை, புதன்

மலையகத்தில் என்றும் தனியாகவாழ்ந்து வரும் எவருமே யாருக்கும் தெரியாமல் இறந்து விடுகிறார்கள். ஆகவே இவர்களை தனியே தவிக்க விட்டு விட்டு இவர்களுடைய உறவினர்கள் திரிவதும், தனிக்குடித்தனம் செய்வதும் நல்லதல்ல என்று கொஸ்லாந்தை தோட்டத்தில் நடந்தைத்து வயதான கதிராயி மரணம்பற்றி, மரணவிசாரணை செய்த அதிகாரி கூறினார்.

அயல்வீட்டுக்காரரான நாராணன் சாட்சியமளிக்கையில், சம்பவம் நடந்ததினம், அவரைக்காணாததால், அவரின்வீட்டினுள்ளே பார்த்தாகவும், அப்போது அவர் இறந்திருக்கக் காணப்பட்டாரென்றும் கூறினார். இயற்கைமரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# அடுத்த கவர்னர் ஜெனரல் யார்?

வெள்ளவத்தை, புதன்

அடுத்த கவர்னர் ஜெனரல் பதவிக்கு தற்போது மூன்று பிரமுகர்களின் பெயர்கள் அடிபடுகின்றன. அவற்றில் ஒன்று திரு. எச். எச். பஸநாயக்கா. இவர் பிரதம நீதியரசராகக் கடமையாற்றி இளைப்பாறியவர். கடந்த தேர்தற் காலங்களில் கூட்டு அரசாங்கத்தின் பத்திரிகை சுவீகரிப்பு முறையைப் பலமாக எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பாகத் தேர்தலில் பிரசாரம் செய்தார்.

அடுத்த பிரமுகர் சேர் லலித ராஜபக்ஷ. இவர் அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் தலைவராக இருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்திற்காக அப்பதவியை ராஜினாமாச் செய்தார். இலங்கைச் சட்டக் கல்லூரியிலே விரிவுரையாளராகவும் பணிபுரிந்திருக்கிறார்.

மூன்றாவது பிரமுகரின் பெயர் சேர் ஜோன் கொத்தலாவலை. தேர்தற் காலத்திலே இங்கு வசித்த இவர், தேர்தல் முடிந்த பிறகு அண்மையிலே இங்கிலாந்து சென்றிருக்கிறார். இம்மூவரும் அடுத்த கவர்னர் ஜெனரல் பதவிக்கும் போட்டியிடப் போவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## சட்டதின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம் புதன்

பொன்னாலை வரதராசப்பெருமான் வித்தியாசாலை தலைமையாசிரியர் திரு. க. சரவணமுத்து தலைமையில் சட்டதினக் கொண்டாட்டம் நடைபெற்றது. ஆசிரியர்கள் க. மாணிக்கவாசகர், கா. துரைராசசிங்கம், சி. சுப்பிரமணியம், கா. கந்தசாமி, ஆசிரியை திருமதி ஞா. பொன்னையா ஆகியோர் சட்டம் சம்பந்தப்பட்ட வெவ்வேறு அம்சங்கள்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். 'மேல்வகுப்பு மாணவிகளின் "கண்ணகி வழக்குரைத்தல்" என்ற கதம்பநிகழ்ச்சியும் இடம் பெற்றது.

## பொலிஸ் நிலையக் கொலைவழக்கு

கொழும்பு, புதன்

வத்தளை பொலிஸ்நிலையக் கொலைவழக்கு நேற்றுக் காலை கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. சேனதிராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் ஜூனியஸ் பெர்னாண்டோ, ஜே. டி. உபாலி ஜயசிங்க ஆகியோர் வத்தளையைச் சேர்ந்த கே. டொன் சிறிலை கொலைசெய்ததாகவும் டொன்வில்லன்டை கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொலிஸ்கான்ஸ்டபிள் தர்மசேன சாட்சியமளிக்கையில் சம்பவம் நடந்ததினம் நள்ளிரவு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும், ஜீப்புக்குச் சென்றபோது இருவர் ஓடியதாகவும் அவர்களைப் பிடிக்க முடியவில்லையென்றும், பொலிஸ் பாதுகாப்பிலிருந்த இருவருக்குக் காயமேற்பட்டதாகவும், அதில் ஒருவர் இறந்ததாகவும் கூறினார்.

## சிரமதான இயக்கம்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த விக்கினேஸ்வரா படிப்பக இளைஞர்கள் வியாபாரிமூலை சித்திவிநாயகர் கோவில் மடத்தையும் கிணற்றையும் அதன் சுற்றாடலையும் கடந்த சனிக்கிழமை சிரமதானம் மூலம் சுத்தம் செய்து திருத்தும் பணியில் ஈடுபட்டனர். சிரமதானத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு திரு. நா. தம்பிராசா மதிய போசனம் அளித்தார்.

<u>அறிவியல்</u>

# பட்டதாரிகளுக்கு புதிய திட்டம்

வெள்ளவத்தை, புதன்

தமிழ்ப் பிரதேசங்களில் அறிவியல் பட்டதாரிகளுக்கு காலியான இடங்கள் இல்லை கூடிய விரைவில் இவர்களுக்கு வேலை கொடுக்கும்படி திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

வெளிநாடு சென்றிருக்கும் தொழில் நுட்பக் கல்விக்குப் பொறுப்பான திரு. அலக்ஸ், நாடு திரும்பியதும் அறிவியல் பட்டதாரிகளுக்கான திட்டம் வகுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## விளையாட்டுக் கழகமும் தொண்டர் சபையும்

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி சாரதா சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் கனகரத்தினம் விளையாட்டுக் கழகத்தினதும் தொண்டர் சபையினதும் அங்குரார்ப்பணக்கூட்டம் சமீபத்தில் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. இ. டா. சிவகுரு தலைமையில் நடைபெற்றது.

இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய உடற்பயிற்சி ஆசிரியர் திரு எம் என் நடராசா விளையாட்டு விளைவால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் தொண்டர் சபையினது அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

## தரஉயர்வு

கல்முனை, புதன்

கல்முனை பட்டினசபை நகரசபை தரத்திற்கு உயர்த்தப்படலாம் எனத் தெரியவருகிறது. கல்முனை பட்டினசபை நாட்டிலுள்ள மற்றைய பட்டினசபைகளிலும் பார்க்ககூடிய வருமானத்தை வருடாந்தம் பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த நூல்நிலையமொன்றையும் நிறுவவதெனவும் சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# தண்ணீர் வசதி செய்க

சாவகச்சேரி, புதன்

மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாசாலைக்கும் விசேஷ தினங்களில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலுக்கும் குழாய் மூலம் தண்ணீர் விநியோகம் செய்துதர வேண்டுமென்று ஸ்தலஸ்தாபன அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் சென்றவாரம் நடைபெற்ற சாவகச்சேரி கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. கூட்டம் கிராமசபைத் தலைவர் திரு. எல். சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்றது.

## மதுவருந்தச் சென்றவர் மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

கள்ளுக்குடிக்கச் சென்ற ஒருவரின் பிரேதம் இருநாட்களுக்குபின் குளத்தில் மிதந்து காணப்பட்ட சம்பவம் நாயன்மார்கட்டில் நிகழ்ந்துள்ளது.

நாயன்மார்கட்டைச் சேர்ந்த சின்னவன் மரணம்பற்றி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

காலஞ்சென்றவரின் மகன் சாட்சியமளிக்கும்போது, தகப்பனார் வெள்ளிக்கிழமை 4 மணிக்கு வழக்கம்போல கள்ளுக் குடிக்கச் சென்றதாகவும், திரும்பி வீட்டிற்கு வராததால் சனிக்கிழமை முழுவதும் அவரைத் தேடியதாகவும் கூறினார்.

விபத்தினால் ஏற்பட்ட மரணம் என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

REGAL - JAFFNA
NOW SHOWING
Danny Kaye
in
THE MAN FROM
THE
DINERS' CLUB

வெற்றிகரமான 5வது வாரம்!
கிங்ஸ்லி பிளாஸா வெம்பிளி ராஜ்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி) (நீர்கொழும்பு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ். எஸ். ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு




திரீ கொயின்ஸ்
சந்தேகத்திற்கே யிடமில்லாத உன்னத லாகர்.

உண்மையான லாகரின் சுவை எப்படியிருக்கவேண்டுமோ அப்படியான சுவையுடையது "திரீ கொயின்ஸ்"......

உலகத்திலேயே சிறந்த மோல்ற் — ஹொப்ஸ் ஆகியனவும், இலங்கையின் மிகச் சுத்தமான தண்ணீருங் கொண்டு, வடிதொழிலின் உயர்ந்த தரங்களுக்கமைய, முறைப்படி வடிக்கப்பட்டு, பக்குவப்பண்ணப்படுகிறது திரீ கொயின்ஸ்.

குளிர்ந்த திரீ கொயின்ஸ் லாகரைப் பரிமாறி உங்களையும் உங்கள் விருந்தினரையும் கௌரவியுங்கள். அது அதிசயிக்கத்தக்க திருப்தி தருவதைக் காண்பீர்கள்

மெக்கலம் புறூவெறிஸ் (சிலோன்) லிமிடெட்

விநியோகஸ்தர்கள் :- ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிடெட், கொழும்பு 3.

# விளம்பரம்

## ஊறணி அர்ச்: அந்தோனியார் திருநாள்

இவ்வருடம் ஆனிமாதம் 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வேஸ்பரும் சுற்றுப்பிரகாரமும். 14-ந் திகதி திங்கட்கிழமை பாடற் பூசையும் நடைபெறும். 406

## தேர்த் திருவிழா அறிவித்தல்

வேலணை மேற்கு மகாகணபதிப்பிள்ளையார் தேவஸ்தான உற்சவ விளம்பரம்

மெய்யன்பர்களே!

12-6-65 சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறுகிறது. முக்கிய கவனிப்பு. தேர்த் திருவிழா வழமைபோல் காலை 11 மணிக்கு ஆரம்பமாகும், பிற்பகல் 2 மணியளவில் வசந்த மண்டபப் பூசை, பின்பு சுவாமி எழுந்தருளி மாலை 5 மணியளவில் லலித வாத்திய ஒலியுடன் தேரில் அமர்ந்து கற்பூர ஆராதனை நடைபெறும். பிறமூர்களில் இருந்து வரும் மெய்யன்பர்கள் 778, 779 பஸ்களில் வந்து புனியங்கூட்டுச் சந்தியில் இறங்கியும் வரலாம். முக்கியமாக 780 சுருவில் பஸ்ஸில் வந்தால் கோவிலுக்குச் சமீபத்தில் வந்திறங்கலாம். அடியார்கள் திரண்டு வந்து மேற்படி ஆலயத்தில் நடக்கும் திவ்விய காட்சிகளைக் கண்டு ஸ்ரீ விநாயகப் பெருமானை தரிசித்து அவர் அருளைப் பெறுமாறு பணிவாய் வேண்டுகின்றோம்.

மேளம்

தேவஸ்தான மேளம்

P. S ஆறுமுகம் கோஷ்டியார்

இசைவல்லார் சண்முகம் கோஷ்டியார்

தனித்தவில் இராசகோபால்

இயனம்

ரதோற்சவ உபயகாரர்

410

## "சுடலை மடத்:.:

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வழ: விறகு வெட்டுவதற்கு யாராவது கொடுவாக் கத்தியை கட்டைக்குக் கொண்டு வந்தார்களா?- ஆம்.

வழ: யார் அந்தக் கத்தியை வைத்திருந்தார்கள்?- தெரியாது.

அடுத்து காயமடைந்த கிட்டிணனின் தந்தை கபிலன் கந்தன் சாட்சியமளித்தார். அதன் பின்னர் மந்துவில் கிராம சேவையாளர் குருநாதன் சின்னத்துரை சாட்சியம் அளித்தார். எதிரிகளின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதை போல் மேற்படி கொலை பற்றிய தகவலை முதன்முதல் கிராம சேவையாளருக்குத் தெரிவித்த க. இரத்தினம் கிராம சேவையாளருக்கு அளித்த வாக்குமூலம் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேல்விசாரணை அடுத்த வாரம் 15-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்வழக்கில் மந்துவிலில் கே. சித்திரன், கே. சுப்பிரமணியம் ஆகியோரைக் கொலை செய்ததாகவும், கே. கிட்டிணனைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் சந்திரன் நாகமுத்து, சின்னையா நவரத்தினம் ஆகிய இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எதிரிகள் சார்பில் திருவாளர்கள் வி. செல்வத்தம்பி, கி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். வழக்காளிதரப்பில் திரு. இ. டா. சிவகுரு, திரு. கே. ஜெயக்கொடி ஆகியோர் சாவகச்சேரிப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. தேவசகாயத்தின் உதவியுடன் வழக்கை நடத்தினர்.

## கறள் பிடித்த கத்தரிக்கோல்

### குழந்தையின உயிருக்கு எமனானது

யாழ்ப்பாணம், வியாழன்

கறள் பிடித்த பழைய கத்தரிக்கோலினால் குழந்தையின் தொப்புள் கொடியை வெட்டியதால், அக்குழந்தை ஏற்புண்டாகி, மரணமான சம்பவம் அல்லைப்பிட்டியில் நிகழ்ந்துள்ளது,

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த கனகம்மாவின் 11 நாள் குழந்தை கிருஷ்ணபிள்ளையின் மரணம் பற்றி யாழ்ப்பாணம் கரைப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

குழந்தையின் தாயாரான கனகம்மா சாட்சியமளிக்கையில், குழந்தை பிறந்த சமயம் கணவன் வீட்டிலிருக்கவில்லை யென்றும், உதவிக்கு வேறு ஒருவரும் இருக்கவில்லையென்றும், குழந்தையின் தொப்புள் கொடியை, கத்தரிக்கோலினால் வெட்டியதாகவும். இதன்பின் குழந்தைக்கு காய்ச்சல் கண்டு ஆஸ்பத்திரியில் அனுமதித்த போது அங்கு குழந்தை மரணமானதென்றும் கூறினர், டாக்டர் விக்னராசா சாட்சியமளிக்கையில், தொப்புள் கொடி காயத்தினால் ஏற்பு உண்டாகி அதனால் மரணமானதென்றார்.

மரண விசாரணை அதிகாரி பொலிஸார் மூலம், அக்கத்தரிக்கோலை கொண்டு வரச்செய்து பார்வையிட்டு, அது கறள் பிடித்தபழைய கத்தரிக்கோல் என்று தெரிவித்தார்.

ஏற்பு மரணம் எனத் தீர்ப்பளித்த மரண விசாரணை அதிகாரி, பிரசவ நிலையிலிருக்கும் ஒரு மனைவியை, உதவியில்லாது தனிமையில் விட்டுச் சென்ற கணவனைக் கண்டித்தார்.

## மீண்டும் தமிழில் இல்லை

வெள்ளவத்தை, புதன்

யாழ்ப்பாணம், காலி, கண்டி ஆகிய இடங்களிலேயுள்ள தொழில் நுட்பக் கல்லூரியிலே ஓய்வு நேரம் (விசிற்றிங்) விரிவுரையாளர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த விளம்பரம் ஆனிமாதம் 4ம் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியிலே ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கிறது. இவ்வெற்றிடங்கள் சம்பந்தமாகத் தமிழிலே எவ்வித விளம்பரமும் வெளியாகவில்லை. சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல், வர்த்தகக் கணிதம், கணக்குமுறை விச்சாரக் கம்பிபேடும் முறை ஆகியபாடங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் படிப்பிப்பதற்குரிய விரிவுரையாளருக்கு மனுக்கள் கோரப்படுகின்றன/

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினராகப் பிரதிநிதியாகிய திரு, வி. நவரத்தினம் அரசாங்க வர்த்தமானியிலேயுள்ள விளம்பரங்கள் தமிழிலும் பிரசுரிக்கப்படாமைகுறித்து ராஜாங்க அமைச்சராகிய திரு ஜே ஆர் ஜெயவர்த்தனாவிடம் முறையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கணவனுடன் செல்ல பெண் மறுப்பு

குருநாகலை, புதன்

ஜீவனும்சம்கோரி மேரி நோனா என்பவரால் தொடரப்பட்ட வழக்கு குருநாகலை மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாஜிஸ்திரேட் திரு. டி, எஸ், டீதிலங்கா மேரி நோனாவை அவரது கணவனை பொடிசிங்காவுடன் செல்லுமாறு வற்புறுத்திய போதும் மேரிநோனா தாம் கணவனுடன் செல்லமுடியாது என மறுத்து தனக்கு ஜீவனாம்சம் கிடைக்குமாறு செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

## 'தீண்டாமை ஒழிப்புக்கு நாடகமே நல்லது'

உடுப்பிட்டி, புதன்

'பொதுக்கூட்டங்களில் பேசுவதன் மூலமும் கட்டுரைகளை எழுதுவதன் மூலமும் சாதிப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதை விடப் புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட குசிர நாடகங்களின்மூலம் தீண்டாமை ஒழிப்புப்பற்றித் தீவிரமானதும் பயன்தரக்கூடியதுமான பிரசாரத்தைச் செய்யமுடியும். பொதுக் கூட்டங்களில் சிலர் வெறும் பொழுதுபோக்கிற்காகவே வந்து உட்காருகிறார்கள், ஆனால் நாடகங்களைப் பார்க்கவருபவர்கள் அதில்நடிக்கப்படும் ஒவ்வொரு கட்டங்களையும் பேசப்படும். கருத்துமிக்க வசனங்களையும் பாடல்களையும் நன்கு கவனிக்கத்தான் செய்வர். தென்னிந்தியாவிலே பல அரசியற்கட்சிகளும் அவற்றின் கொள்கைகளும் சினிமா நாடகங்களின் மூலமே பொதுமக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வந்துள்ளன. இலங்கையிலும் இவ்வாறு நாடகங்களின் மூலம் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பிரச்சாரஞ் செய்யும் முறை வரவேண்டும்' இவ்வாறு துன்னாலை தெற்கு பாரதநாட்ய மன்றத்தை அங்குரார்ப்பணஞ் செய்துவைத்துப் பேசிய திரு பா. தவயோகம் கூறினர்.

நாடக இயக்குநரும் ஆசிரியருமான திரு. மு. செல்லத்தம்பி பேசுகையில், "இந்நாட்டில் நிலவிவரும் மூடக் கொள்கைகளுக்கும் சாதிப் பிரிவுகளுக்கும் சமாதிகட்டவேண்டுமாயின புரட்சிகர நாடகங்களை நாடெங்கும் மேடையேற்றவேண்டும்" என்றார்.

துன்னாலூர் மகிந்தன் பேசுகையில், "அரசியலில் வேறுபட்ட கொள்கைகளை கொண்டிருந்தாலும் சமுதாய இன்ப துன்பங்களிலும் நாடகங்களை நடாத்துவதிலும் ஒற்றுமையாக இருக்கவேண்டும்" என்றார். மன்றத்தின் கட்டுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்: திரு. பு. சிவயோகம். தலைவர்: திரு. பா. தவயோகம், உபதலைவர்: திரு. ஐ. சிவபாதம், செயலாளர்: திரு. க கணேசன், உபசெயலாளர்: திரு. வி. வீரமணி, பொருளாளர்: திரு. த. இராஜா, உபபொருளாளர்; திரு. பு சிவலிங்கம்.

## சுகாதார வாரம்

நெடுந்தீவு, புதன்

சுகாதார வாரத்தை நெடுந்தீவில் கொண்டாடும் முகமாக அண்மையில் சுகாதாரப் பரிசோதகரால் ஓர் கூட்டம் கூட்டப்பட்டது, கல்லூரி அதிபர்கள், பாடசாலைத் தலைமையாசிரியர்கள் உட்படப் பல பிரமுகர்கள் அக் கூட்டத்திற்குச் சமூகம் கொடுத்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர்.

சுகாதார விழாவின் போது கடனம், நாடகம், பேச்சு, பாட்டு, விளையாட்டு போட்டி ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெற வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## மேலும் 3 நெசவு ஆலைகள்

பம்பலப்பிட்டி, புதன்

மேலும் 3 நெசவு ஆலைகள் விரைவில் தேசிய ஜவுளி கார்ப்பரேஷனால் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது கார்ப்பரேஷனின் தலைவர் திரு லக்ஷ்மன் ராஜபக்ஷவின் நெசவு ஆலைகள் விஸ்தரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே மூன்று நெசவு ஆலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

பூகொடை நெசவு ஆலையை வேறு இடத்துக்கு மாற்றும் உத்தேசமில்லை யெனவும் எதிர்க்கட்சி எம் பிக்கள் இதுகுறித்து தெரிவிக்கும் புகாரில் உண்மையில்லையென்றும் கார்ப்பரேஷன் தலைவர் திரு லக்ஷ்மன் ராஜபக்ஷா தெரிவித்துள்ளார்

# வரி விளம்பரம்

தொய்வு, கசம், நீரழிவு, வெண்மை முதலிய பல வகையான வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாய பிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்

### கல்வி

பி. ஏ: ஜி. ஏ. கியு: ஜி. சி. ஈ உயர்தர, சாதாரணதரங்கள்: கலைஞானம்: வர்த்தக வகுப்புகளும்: அப்போதிக்கரிப்பு குழுக வகுப்பு மத்திய எழுதுவினைஞர் வகுப்பு: வேறு பல வகுப்புகளுக்கும், தனிப்பட்ட வகுப்புகளுக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

யாழ்- டியூட்டோறியல் கல்லூரி; கைலாச பிள்ளையார் கோவிலடி நல்லூர் யாழ்ப்பாணம், 366

### EDUCATIONAL

Excellent Study Classes with individual attention for BA, GAQ G C E. Advanced Leval Arts / Science, G C. E. ordinary level Arts/ Science / Commerce, G.C.E Prep Science; English/Tamil Typewriting, Shorthand Book-keeping, Commerce; Sinhala.

United Institutes, Nelliady Karaveddi/ 107, Point-Pedro Road, Nallur, Jaffna. 384

## திருமண நிகழ்ச்சி

அருள்ராஜா — சாமுவேல்

வணக்கத்திற்குரிய ஏ. சி. தம்பிராஜா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான திரு. அருள்ராஜாவிற்கும், மெஸ்சேர்ஸ் போர் அன் கம்பெனி ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. எட்வின் சாமுவிலின் இரண்டாவது புத்திரியான செல்வி ஐதின்பத்மினிக்கும் திருமணம் நவாலி சி. எஸ். ஐ. தேவாலயத்தில் முறைப்படி நடைபெற்றது. திரு. சி. அருள்ராஜா விவசாய இலாகாவில் ஆராய்ச்சி அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார்.

வணக்கத்திற்குரியவர்களான ஏ. சி. தம்பிராஜா (மணமகனின் தந்தை) ஜே. ஐ. இரத்தினராஜா, அம்பலவாணர் ஆகியோர் விவாகச் சடங்குகளை நடத்தி வைத்தனர். மணமகளை அவரின் தகப்பனார் தோழிச் செல்விகள் சந்திரா மாலாவின் உதவியுடன் ஒப்படைத்தார். சின்னத்தோழியாக செல்வி விநோதினி சாமுவேல் இருந்தார், செல்விகள் பிறிஸிதாவும், ரோசாவும் பூ பெண்களாகவும் செல்வன் ஜெயமேதர் தோழனாகவும் இருந்தனர்,

டாக்டர் ஏ. கே. பிளாக்கும் திரு. ஐ. பி துரைரத்தினமும் பதவுப புத்தகத்தில் சாட்சிகளாக கைச்சாத்திட்டனர்,

மானிப்பாயில் மணமகன் இல்லத்தில் பெற்றோர்கள் ஓர் விருந்துபசாரத்தை நடத்தினார்கள்.

## நயினை வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோவில் வருடாந்த மகோற்சவம் ஜூன்மாதம் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 13-ந் திகதி ஜூலை மாதம் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவுடன் முடிவடையும்.

இவ்வருடம் பிரயாணவசதிகள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் யாவும் சிறந்தமுறையில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக ஆலய தர்ம பரிபாலன சபையார் அறிவித்துள்ளனர்,

### விற்பனைக்கு

பருத்தித்துறை காசியபதி காரி கந்தோர், இ. போ. ச. டிப்போ, கந்தசுவாமி கோவில் ஆகியவற்றிற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடும், காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நா. முத்துக்கிருஷ்ணர் இலட்சுமிபதி, புலோலி கிழக்கு பருத்தித்துறை: 380

உடுப்பிட்டி - வல்வெட்டி ரோட்டில் 7 1/2 பரப்பு பனங்காணி. விபரம்: க. தியாகராசா, நாதன்ஸ், கல்வியங்காடு, யாழ்ப்பாணம் 393

மெமோரியல் பாடசாலைக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பெற்ற வீடு, 4 பரப்புக் காணியுடன் உள்ளது மெமோரியல் ஸ்கூல் லேன், மானிப்பாய், விபரம்: E கனகரெத்தினம், 8-ம் கடை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 396

### காணவில்லை

இ. போ. ச. இலவச பிரயாணச்சீட்டும், சொண்டக்ட் லைசனசும் தூக்குப்பையுடன் அராலி—சித்தங்கேணி ஊடாகக் கீரிமலை பஸ்ஸில் கைதவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவுசெய்து யாழ்ப்பாண பஸ் நிலைய கந்தோரில் கொடுக்கவும். வே. கனகசுந்தரம், 'கொண்டக்டர்', மேற்கு டிப்போ, யாழ்ப்பாணம். 391

### சன்மானம்

வவுனியா பஸ்நிலையத் தங்குமிடத்தில் வியாழன் இரவு, முக்கியமான பத்திரங்கள், லைல்கள், திறப்புக்கோவைகள், பணநோட்டைப் பொருட்களைக்கொண்ட ஒரு சூட்கேசை ஓர் அன்பர் இழந்துவிட்டார். இதனைக் கண்டெடுப்பவர்கள் வவுனியா, கடைவீதி. என். எம். யூசுப், ஜே. பி. அவர் விடம் ஒப்படைத்தால் நூறு ரூபாய் சன்மானம் வழங்கப்படும். 895

### தேவை

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தடியில் இருக்கும் திரீஸ்டார் ப்பட்டக் கம்பெனியில் வேலை செய்ய பெண்பிள்ளைகளும், ஆண்பிள்ளைகளும் தேவை. அனுபவமுள்ளோரும் விண்ணப்பிக்கலாம் இவர்களை மேற்பார்வையிட ஒருவயது முதிர்ந்த அம்மாளும் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு மாலை 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நேரில் வந்து விண்ணப்பிக்கவும் காலம் 12-5-65 வரை. A S சபாரத்தினம், 138 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 397

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 10-6-65 கொழும்பு

(செய்திகள் காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை: 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை,

பகல்: 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை,

இரவு: 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இசைப் பயிற்சி, 7-00 உரைச்சித்திரம், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முன்னீக் நிகழ்ச்சி, 9-15 வீணை. 9-30 நேயர் விருப்பம், 10-00 இசைய ஒலிப்பதிவுகள்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# இராணுவத்தினரின் நடவடிக்கைகள்

## நேரில் ஆராயும்பொருட்டு உயர் அதிகாரிகள் இங்கு வருகிறார்கள்

குரும்பசிட்டி, புதன்

யாழ் மாவட்ட பகுதியில் முகாமிட்டுள்ள இராணுவவீரர்களின் நடவடிக்கைகள் குறித்தும் கள்ளக்குடியேற்றத் தடுப்பு ஏற்பாடுகள் பற்றியும் கவனித்து ஆராய்வதற்காக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு ஜி.வி.பி. சமரசிங்கா தலைமையில் உயர்தர அதிகாரிகள் அடங்கிய தூதுகோஷ்டி ஒன்று நாளை வியாழ கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறது. இலங்கை ஆகாய விமானத்தில் காலை 9 மணிக்கு பலாலி விமான நிலையம் வந்து சேரவிருக்கும் இத் தூதுகோஷ்டியில் இராணுவ தளபதி கேர்ணல் றிச்சாட் உடுகம, கடற்படைத்தளபதி கப்டன் ராஜன்கதிர்காமர் விமானப்படை தளபதி ஆர். அமரசேகரா, குடியேற்ற வெளியேற்ற கட்டுப்பாட்டதிகாரி திரு டி. ஜெயசிங்கா ஆகியோரும் இருப்பர்.

அன்றைய தினம் இக்கோஷ்டி பலாலி, வல்வெட்டித்துறை, காரைநகர், இயக்கச்சி ஆகிய இடங்களிலுள்ள இராணுவ முகாம்களை நேரில் சென்று பார்வையிடுவதோடு யாழ்ப்பாண பதில்அரசாங்க அதிபர் திரு ஏ பெருமைனார், பொலிஸ் சுப்ரீண்டன் திரு ஐ. வன்சாண்டன் மற்றும் பலாலி இராணுவ நிலைய அதிகாரி, காரைநகர் கடற்படை அதிகாரி ஆகியோர் உட்பட பல அரசாங்க அதிகாரிகள் பங்கு கொள்ளும் மகாநாடு ஒன்றில் கலந்துகொண்டு இராணுவ நடவடிக்கைகள்; கள்ளக்குடியேற்றத்தடுப்பு ஏற்பாடுகள் பற்றி ஆராய்வர். ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் உத்தரவின் மீது யாழ்ப்பாணம் வருகிற இத் தூது கோஷ்டி சமர்ப்பிக்கும் அறிக்கையினைத்தொடர்ந்து வடபகுதியில் முகாமிட்டுள்ள இராணுவப் படையை வாபஸ் பெறுவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமெனத் தெரியவருகிறது.

---

"உணவுப் பொருள்

# விநியோகத்தில் அனுபவமில்லை"

## கூ. மொ. வி. ஸ்தாபன முன்னைநாள் தலைவர் சாட்சியம்

கொழும்பு, செவ்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஊழல்கள் சம்பந்தப்பட்ட பகிரங்க விசாரணையை இன்றுகாலை விசாரணைக் கமிஷன் ஆரம்பித்த போது கமிஷனின் தலைவர் திரு. எச். டபிள்யு. ஆர். வீரசூரியா முதலாவதாக சாட்சியமளித்த கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் முன்னைநாள் தலைவர் திரு. தேசப்பிரிய சேனநாயகாவிடம் ஒழுங்குவிதி முறைகளை மீற வேண்டாமெனத் தெரிவித்தார்.

சாட்சியமளித்த திரு. சேனநாயக்கா தெரிவித்ததாவது:

கமிஷனர்களில் ஒருவராக இருக்கும் திரு. டி. எல். எம். பெய்ரிஸ் கடந்த பொதுத் தேர்தலின்போது நான் போட்டியிட்ட டெடிகமத் தொகுதியில் (திரு. டட்லி வெற்றியீட்டிய தொகுதி) எனக்கெதிராகத் தீவிரமாக வேலைசெய்தவர் என்பதை கவனத்துக்கெடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த விசாரணையின் போது திரு. பெய்ரிஸ் ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்ள மாட்டாரென நம்புகின்றேன். தனிபட்ட முறையில் என்னைப் பற்றி கருத்து வெளியிடமாட்டாரெனவும் நான் எதிர்பார்க்கிறேன்.

இச் சந்தர்ப்பத்தில் கமிஷனின் தலைவர் திரு. வீரசூரியா குறுக்கிட்டு விஷயத்துக்கு அப்பால் பட்டவற்றைத் தெரிவிக்க வேண்டாமெனத் தெரிவித்தார்.

'கமிஷனர்களுக்கு எதிராக இவ்வித கருத்துக்களைக் கூறி அவை பதிவாகுவதை நாம் அனுமதிக்க முடியாது. இந்த மாதிரியான கருத்துக்களை மேலும் தெரிவிக்க அனுமதிக்க முடியாது' என்றும் திரு. வீரசூரியா குறிப்பிட்டார்.

திரு' சேனநாயகா தொடர்ந்து தமது சாட்சியத்தில் கூறியதாவது:

நான் ஒரு வழக்கறிஞர். நான் தேர்தலில் போட்டியிடு முன்னர் 'லங்கா தீப' பத்திரிகையில் உதவி ஆசிரியராக கடமையாற்றி வந்தேன். 1960-ம் வருடம் மார்ச் மாதம் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன். இதன் பின்னர் டெடிகமத் தொகுதியில் போட்டியிடுவதற்காக அப்பதவியை ராஜினாமாச் செய்தேன். என்னை திரு. டி. பி. இலங்கரத்ன நியமித்திருந்தார். எனக்கு உணவுப் பொருள்கள் விநியோகத்தில் அனுபவமில்லை. பத்திரிகை உதவி ஆசிரியர் அனுபவம் மட்டுமே எனக்கு இருந்தது. கூ. மொ. வி. ஸ்தாபன பதவிக்கு நான் விண்ணப்பிக்கவில்லை. நான் கூ மொ வி ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தபோது ரூ 1500 மாதச் சம்பளமாகப் பெற்றேன். தற்போது என் வங்கிக்கணக்கில் ரூபா 4 ஆயிரம் இருக்கிறது. சேமலாபநிதி மூலமாகப் பெற்ற 7,000 ரூபாவையும் நான் வங்கியில்கட்டியிருந்தேன். நான் இந்த பதவி ஏற்றபோது எனது வங்கிக் கணக்கில் ரூபா 10 ஆயிரம் இருந்தது. இதைத்தவிர வேறு சேமிப்பு எதுவும் கிடையாது வேறு சொத்தும் கிடையாது.

---

கொழும்பு, செவ்

முன்னாள் உதவி மந்திரி திருமதி விவியன்குணவர்த்தனவை ஒரு எதிரியாகக் கொண்டவழக்கொன்றில் குற்றம் சுமத்தப்பட்ட சகல எதிரிகளும் தாங்கள் சுற்றவாளிகளெனத்தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 22-ம் திகதி இரவு தெமட்டக்கொடையில் நடைபெற்ற ஒருசம்பவத்தைத் தொடர்ந்து திருமதி விவியன் மற்றும் இருவர்மீதும் பொலிஸார் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

பொரளையிலுள்ள அரிமுருகன் வங்கி உரிமையாளர் திரு சுப்பையா வாமதேவன் சாட்சியமளிக்கையில்: குறிப்பிட்ட இரவு தம்மைத் தாக்கி தம்மிடமிருந்த 55 ரூபாவையும் ஒரு பாக்கர் பேனாவையும் களவாடியதாகக் கூறினார்.

---

# கூட்டுறவு சங்கங்களுக்கு அதிக வசதி அளிக்குக

## அரசாங்கத்துக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ

அத்தியாவசிய உணவுப் பொருட்களை நேரடியாக இறக்குமதி செய்ய கூட்டுறவுச்சங்கங்களுக்கு அரசாங்கம் வசதியளிக்க வேண்டுமென்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று மூன்தினம் நடைபெற்ற கூட்டுறவு ஆய்வு வகுப்பில்தீர்மானிக்கப்பட்டது.

தனிப்பட்ட வாத்தகர்களால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் ஒரு பகுதியை, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும், இலங்கையிலுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் ஒருபகுதி பொருட்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்க அரசாங்கம் வசதிசெய்ய வேண்டுமென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கூறியவை நடைபெறுவிடின் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு அதிக வசதி ஏற்படுமென்றும், குறைந்த அளவு கடைகளுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வசதிக் குறைவு ஏற்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

---

# மேயரும் அங்கத்தவரும்

யாழ்ப்பாணம், புதன்

1953- வருடத்தில் தேர்தல் சட்டத்தில் செய்யப்பட்ட 9-வது பிரிவின்படி ஒரு உள்ளூராட்சி சபையில் அங்கம் வகிப்பவர் இன்னொரு உள்ளூராட்சி சபையில் அங்கம் வகிக்க முடியாதென உள்ளதால் புலோப்பளை கிராமசபையில் அங்கத்துவம் வகிக்கும் திரு ஏ. ஜி. இராஜசூரியர் யாழ்ப்பாண மாநகரசபையில் அங்கத்தவராக இருக்கவோ அல்லது வாக்களிக்கவோ உரிமை யற்றவராக இருப்பதால்அவர் யாழ்ப்பாண மாநகரசபையில் அங்கத்துவம் வகிக்கும் உரிமையை இழந்துவிட்டார் என்பதை தேர்தல் அதிகாரிக்கு தாம் தெரிவிப்பது தமது கடமை என யாழ் மேயர் திரு எஸ். ஜி மகாதேவா தேர்தல் அதிகாரிக்கு அறிவித்ததாகத் தெரிகிறது.

"மாநகரசபைச் சட்டத்தின் 13-வது பிரிவின்படி யாழ்ப்பாணமாநகரசபையின் மேயர் என்ற நிலையில் இதனை எடுத்துக்கூறுவது தமது கடமையாக தாம் கருதுவதாகவும் இந்த பொதுவான விதியைத் திருத்துவதற்கு மந்திரிவிசேஷ உத்தரவு கொடுக்கப் படாவிடில் முதலாவது வட்டாரத்திற்கான (தற்போது திரு இராஜசூரியர் பிரதிநிதித்துவம்வகித்துவரும் வட்டாரம்)தேர்தலை நடத்துவது தேர்தல் அதிகாரியின் கடமை எனவும் இந்த வட்டாரத்துக்கான—தேர்தலை நடத்துமாறு மேயர் தேர்தல் அதிகாரியைக் கேட்டுள்ளதாகவும்அறியப்படுகிறது.

---

# கன்னங்கரா லண்டன் சென்றார்

கொழும்பு' செவ்வாய்

முதலாவது சதிவழக்கின் சிரேஷ்ட வழக்கறிஞர்களில் ஒருவரான திரு ஆர். ஏ. கன்னங்கரா கடந்த சனிக்கிழமை லண்டனுக்குப் பயணமானார். சதிவழக்கு எதிரிகளின் அப்பீலில் திரு ஈ.எவ்.என். கிரேஷியனுக்கு உதவியளிக்கும் மூகமாகவே இவர் அங்கு சென்றுள்ளார்.

---

இ. போ. ச,

# உயர் அதிகாரிகள் இடமாற்றம்?

கொழும்பு, செவ்

இ.போ. சபையின் தலைமைக் காரியாலத்தில் உயர்தர உத்தியோகங்கள் வகிக்கும் சுமார் 60 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்கள்.

---

# மீண்டும்சோதனை

யாழ்ப்பாணம், செவ்

யாழ். கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியினரால் ஏப்ரல் மாதம் 28-ம் 29-ம் திகதிகளில் நடத்தப்பட்ட பரீட்சை மீண்டும் இம்மாதம் 11-ம் 12-ம் திகதிகளில் நடைபெறும் எனத் தெரிய வருகிறது. சோதனை வினத்தாள்கள் சோதனைக்கு முன்னரே வெளியானதால் அதைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்றது தெரிந்ததே.

---

# விலையைக் குறைக்க தீர்மானம்

கொழும்பு, புதன்

மீன், மரக்கறி ஆகியவற்றின் விலையைக் குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நேற்று கூடிய வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான மந்திரிகள் உப கமிட்டி தீர்மானித்தது.

கூட்டுறவு இலாகாவுடன், விற்பனை இலாகாவையும் இணைத்துச் செயலாற்றும்படி உத்தரவிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

---

# உப அதிபர்களுக்கு தராதரமில்லை

கொழும்பு, புதன்

கூட்டு அரசாங்கத்தினால் நியமனம்செய்யப்பட்ட சுமார் எழுநூறு பாடசாலை உபஅதிபர்களுக்கு தேவையான தராதரம் இல்லையென்றும் அவர்களின் நியமனத்தை உறுதிப்படுத்தவேண்டாமென்றும் கல்வி மந்திரி வித்தியாதிபதிகளைக் கேட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக மேல்விசாரணை நடைபெறும்வரை நியமனம் உறுதிப்படுத்துவது நிறுத்திவைக்கப்படும்.

---

# அம்மன் கோவில் பொங்கல் விழா

முல்லைத்தீவு,புதன்

முல்லைத்தீவுப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவிலில் சிறப்பாக நடைபெறும் வருடாந்த பொங்கல் இம்மாதம் 14ம் திகதி திங்கட்கிழமை வழமைபோல் ஆரம்பமாகும். இதற்கான ஏற்பாடுகளை மேற்படி கோவில் பரிபாலனசபை துரிதமாக மேற்கொண்டுள்ளது.

---

பம்பலப்பிட்டி, புதன்

இலங்கையின் பலபகுதிகளிலும் 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம்வரையான வேலையற்ற இளைஞர்களை விவசாய கூட்டுறவுப் பண்ணைகளில் அமர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டம்பற்றி வேலையில்லாத்திண்டாட்டம் சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட மந்திரிசபை உபகமிட்டி ஆராய்ந்தது.

---


காணி விற்பனவு

நீர்வேலி தெற்கு வெண்காயச் சங்கத்திற்குப் பக்கமாகவும், நீர்வேலி தெற்கு வயிரவ கோவிலுக்கு அண்மையிலவுக்குப் பக்கத்திலுள்ள 5 அறைகள்கொண்ட 2 பரப்புக் காணியும் அதன் அருகிலுள்ள 8 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. வீட்டைச் சேர்ந்த இரண்டு பரப்பைத் தனித்தும், 8 பரப்பை இரண்டாகப் பிரித்து தனித்தனியேயும், அல்லது ஒருமித்தும் விலைக்குக் கொடுக்கப்படும். விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் காணவும். விற்பனையாளர்: கெ. கெ. அம்புரோஸ்மேற் பார்த்து நம். 16 மடம்வீதி, யாழ்ப்பாணம். 363


---

# திருமணத்திற்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் எஸ். புவிராசசிங்கம் பிரேதபரிசோதனை செய்தபின் அப்பெண்மீது 12 வெளிக்காயங்கள் காணப்பட்டதாகவும் உள் காயங்களும் இருந்ததாகவும் கூறி அதிர்ச்சியினால் மரணமானார் என்று கூறினார்.

மோட்டார் வான் கிளீனர் தம்பிப்பிள்ளை சாட்சியமளிக்கையில், அப்பெண் வானை நிறுத்த கையைக் காட்டிய போது வான் அப்பெண்மீது மோதியதாகவும், அப்பெண் வனுக்கும் மரத்திற்குமிடையில் அகப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லும் வழியில் மரணமானார் என்றும் கூறினார்.

மோட்டார்கார் பரிசோதகர் அந்த மோட்டார் வானைப் பரிசோதனை செய்தபின் வானிலுள்ள பிரேக் நல்ல நிலைமையிலிருப்பதாகவும் ஸ்ரேரிங்வீல் நல்ல நிலையில் இல்லை என்றும் கூறினார்.

வானின் சாரதி ஜேம்ஸ் அப்பு அக்கேரம் வானைச் செலுத்தியதாக போதியளவு சாட்சியங்கள் இல்லாததால் இதுபற்றி நேரில் விசாரணை செய்யுமாறு மரணவிசாரணை அதிகாரி பொலிசாருக்கு உத்தரவிட்டு மீண்டும் இன்று பிற்பகல் 3 மணிக்கு இம்மரணம் பற்றி விசாரணை நடைபெறும் என்றும் கூறினார்.

---

# 750 மாணவ தாதிகள் தெரிவு செய்யப்படுவர்

பம்பலப்பிட்டி, புதன்

சுகாதார சேவை இலாகா விரைவில் 750 மாணவ தாதிகளைத் தெரிவுசெய்யவிருக்கிறது.

தொகுதிவாரியாக இல்லாது பொதுப் பரீட்சை ஒன்றின் மூலமாக இவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வித பொதுப் பரீட்சை ஒன்றை நடத்த சுகாதார மந்திரி திரு. டி. எச், ஜெயவர்த்தன நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

---

# சீனப்பிரதமரின் திட்டத்தில் மாற்றம்

கெய்ரோ, ஜூன் 9

சீனப்பிரதமர் சூ-என்-லாய் தான்ஸானியாவுக்கு விஜயம்செய்தபின் நாடுதிரும்ப முடிவுசெய்துள்ளார். நேற்று அவர் டமாஸ்கஸ் சென்றார். இம்மாத இறுதியில் அல்ஜியர்ஸில் நடைபெறும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு முன்னர் மற்றும் ஆபிரிக்க நாடுகள் பலவற்றுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார் ஆனால் தமது திட்டத்தைமாற்றிக்கொண்டு பீகிங் திரும்புகிறார்.

---

# 5 பொலிஸ் உத்தியோகஸ்தர் தற்காலிக வேலைநீக்கம்

பம்பலப்பிட்டி, புதன்

சென்றவார இறுதியில்கொச்சிக்கடை துறைமுக கிட்டங்கில் இறக்குமதிசெய்யப்பட்ட சாரங்களைக்கொண்ட 4 பேல்கள் திருட்டு போனது சம்பந்தமாக ஒரு சிரேஷ்ட இன்ஸ்பெக்டரும் 4 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் நேற்று அவர்களது பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளார்கள். விரைவில் இவர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படுவார்களென அறியப்படுகிறது.

---

# மக்கள் வங்கியின் புதிய தலைவர்

பம்பலப்பிட்டி, புதன்

திரு. ரி பி. பனபொக்கே மக்கள் வங்கியின் புதியதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதியதலைவர் 1951-ம் ஆண்டு உதவி நீதிமந்திரியாகவும் பின்னர் உணவு விவசாய உதவி மந்திரியாகவும் கடமையாற்றியுள்ளார்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 15-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.